

கோவை வடக்கு மாவட்டம் கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து (பூத்) பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில், கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் மூலனூர் எஸ்.கார்த்திக் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதி சார்பாக டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ ஏற்பாட்டின்படி தஞ்சை மேம்பாலம் காது கேளாதோர் பள்ளியில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. அந்நிகழ்வில் மத்திய மாவட்ட கழக செயலாளர் துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி, மாவட்ட அவைத்தலைவர் சி.இறைவன், மாநகரச் செயலாளர் மேயர் சண்.இராமநாதன், துணை மேயர் அஞ்சுகம் பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாவட்ட பொருளாளர் எல்.ஜி.அண்ணா, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.தர்மராஜ், எஸ். ஆறுமுகம், டி.புண்ணியமூர்த்தி, ஒன்றிய கழக செயலாளர்,பகுதி செயலாளர்கள் ஆர்.கே.நீலகண்டன், டி.எஸ்.கார்த்திகேயன், சி.மேத்தா, சதாசிவம், குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஒன்றிய,மாநகர, பேரூர், வட்ட,கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணியினர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### திருச்சி மாவட்டம் துறையூரில் - ரூ.11 கோடியில் பேருந்து நிலைய விரிவாக்க பணிகள்!

# ரூ.108 கோடி மதிப்பில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள்

## அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைத்தார்!

திருச்சி, ஜூன் 28-

திருச்சி மாவட்டம் துறையூரில் 108 கோடி மதிப்பில் உருவாக்கப்படும் புதிய காவிரி கூட்டு குடிநீர் திட்ட பணிகளும், 11 கோடி மதிப்பில் துறையூர் அண்ணா பேருந்து நிலையத்தை புதுப்பிக்கும் பணிகளும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என். நேரு தொடங்கி வைத்தார்

மேலும், துறையூர் முசிறி ரவுண்டானா முதல் பெரம்பலூர் மெயின் சாலை வரையிலான புறவழிச் சாலைகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் அமைக்கப்பட்ட, உயர் கோபுர, சோலார் மின் விளக்குகள், உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களும் அமைச்சர் கே.என். நேரு அவர்களால் திறந்து வைக்கப் பட்டன.

நிகழ்வின் போது, அமைச்சர் கே.என்.நேரு கூறியிருப்பதாவது:

இன்னும் 30 ஆண்டுகள் "துறையூர் மற்றும் சுற்றுவட்டார மக்களின் நீர்த்தேவையை பூர்த்தி செய்யும் வகையில், காவிரி கூட்டு குடிநீர் திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமையும். இத்துடன், பேருந்து நிலையம் மேம்படுத்தப்படுவதால், பொதுமக்கள் மற்றும் பயணிகளுக்கு ஏற்றவாறு சிறந்த வசதிகள் கிடைக்கும்" எனத் தெரிவித்தார். மேலும்

துறையூர் நகராட்சிக்கு உட்பட்ட 20 வது வார்டில், நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள், சுமார் 70 ஆண்டு காலமாக வசித்து வருவதாகவும் அவர்கள் குடியிருப்பு வீட்டிற்கு பட்டா கேட்டு பல ஆண்டுகளாக போராடி வருவதாகவும் அமைச்சரிடம் மனு அளித்தனர் மனுவை பெற்றுக்கொண்ட அமைச்சர் அதற்கான பணிகளை மேற்கொண்டு உடனடியாக பட்டா வழங்க அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் திருச்சி மாவட்ட ஆட்சியர் சரவணன், பேரூராட்சி இயக்குனர் பிரதீப் குமார், நகராட்சி ஆணையர் வாசுதேவன், துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், முசிறி சட்டமன்ற உறுப்பினர் தியாகராஜன், மண்ணச்சநல்லூர் கதிரவன்,நகர் மன்ற தலைவர் செல்வராணி மலர்மன்னன்

துணைத் தலைவர் மெடிக்கல் முரளி முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, முத்துச்செல்வம் வீரபத்திரன் சரவணன், அசோகன், நகர் மன்ற உறுப்பினர்கள் வீரமணிகண்டன், சுதாகர், கார்த்திகேயன், இளைய ராஜா அம்மன் பாபு சுமதிமதியழகன், கல்பனா தனலட்சுமி, முத்து மாங்கனி பிரபு, பொதுக் குழு உறுப்பினர் கிட்டப்பா, விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் சுரேஷ்குமார், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தலைவர் மகாலிங்கம், மைனர் பாலமுருகன், தக்காளி தங்கராசு உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### கரூர், நாமக்கல் கிழக்கு - மேற்கு மாவட்ட

# வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்! என்.ஆர். இளங்கோ எம்.பி. சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர்கள் வி.செந்தில்பாலாஜி - கே.எஸ்.மூர்த்தி பங்கேற்பு!

கரூர், ஜூன் 28-

கரூர், நாமக்கல் கிழக்கு, மேற்கு மாவட்டங்களை சார்ந்த கழக வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் கரூரில் நடைபெற்றது. சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்வது குறித்து வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் என்.ஆர்.இளங்கோ சிறப்புரையாற்றினார்.

கரூரில் கரூர், நாமக்கல் கிழக்கு, மேற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கழக வழக்கறிஞர் அணி சார்பில் 2026ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்வது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கழக வழக்கறிஞர் அணி மாநில செயலாளர் என். ஆர். இளங்கோ கலந்து கொண்டு தேர்தலில் பணியாற்றுவது குறித்தும், சட்ட நுணுக்கங்களோடு எதிர்கொள்ளது குறித்தும் திமுக வழக்கறிஞர்களுக்கு ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றினார்.

திமுக சட்டத்துறை மேற்கு மண்டலம் 2 கரூர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, டிஎல்சி, சிஎல்சி, யுஎல்சி, என்எல்சி, சிடிஎல் சி வழக்கறிகளுக்கான 2026 சட்டமன்ற தேர்தல் ஆலோசனைக் கூட்டம் கரூரில் நடைபெற்றது. மூத்த வழக்கறிஞரும், மாநில சட்டத்துறை செயலாளருமான என். ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை தாங்கி பேசினார். கரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கே.தாசபிரகாஷ், நாமக்கல் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தபாபு, வரவேற்புரையாற்றினர்.

கரூர் மாவட்ட கழக செயலாளர், கழக மேற்கு மண்டல ஒருங்கிணைப்பாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளர் கே.எஸ்.மூர்த்தி, மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், துணைச் செயலாளர்கள் எம்எஸ்பி .வீரமணி, ஜிசந்திர போஸ், நாமக்கல் மேற்கு மாவட்ட அமைப்பாளர் ஏஆர். தன சேகரன், தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி. விஜயகுமார், கிருஷ்ணராயபுரம் எம்எல்ஏ சிவகாமசுந்தரி, முன்னாள் எம்எல்ஏ பி.காமராஜ், முன்னிலை வகித்தனர். கரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் பி. ரமணி, துணைத்தலைவர் இரா. மணிவாசகம், துணை அமைப்பாளர்கள் கே எஸ்எம்.சாகுல்ஹமீது, சி சோமசுந்தரம், எம்.லட்சுமணன்,

டி பிச்சைமுத்து, எம். செல்வகுமார், நாமக்கல் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் என்கேபி.வடிவேல், எஸ். கண்ணன், எஸ்.பழனிச்சாமி, எஸ். வெங்கடாசலம், ஏ.அகிலன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள் டி.சுரேஷ்பாபு,

டிஎம். சரவணகுமார், ஏபி.வெங்கட் கண்ணன், எஸ்.ரமேஷ், இஎன். மாதேஸ்வரன், எஸ். ஆனந்த், கே. நல்லுசாமி, சிறப்பு அழைப்பாளர்களாக கரூர் வழக்கறிஞர்கள் என். செந்தில்குமார், இரா.குடியரசு, டி. ராஜேஸ்வரி, டி.நீலமேகம், கே. பாலசுப்பிரமணியன் என்.பி. ரமேஷ் நக்கீரன் கே. சுப்பிரமணியன் ஜி.ராஜேஸ்வரி கலந்து கொண்டனர். ஐ.கணபதி நன்றியுரை கூறினார். விழா ஏற்பாடுகளை கரூர் மாவட்ட வழக்கறிஞர் அணியினர் செய்திருந்தனர்.

### தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. -சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. மீது

# முந்தைய அ.தி.மு.க. அரசு தொடர்ந்த பொய் வழக்கு - கழகத்தினர் விடுவிப்பு!

## தஞ்சை முதன்மை நீதிமன்றம் உத்தரவு!

தஞ்சை, ஜூன் 28-

கடந்த அதிமுக ஆட்சியில் தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு. கல்யாணசுந்தரம் எம். பி, கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன் உள்பட பலர் மீது தொடரப்பட்ட பொய் வழக்கிலிருந்து வழக்கிலிருந்து விடுதலை செய்து தஞ்சை முதன்மை நீதிமன்றம் நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 2016ம் ஆண்டு பணமதிப்பிழப்பை கொண்டு வந்த ஒன்றிய அரசை கண்டித்து சென்னையில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி ஒன்றிய அரசை கண்டித்தார். இதனால் கழகத் தலைவர் அவர்கள் கைது செய்யப்பட்டார். அதனை கண்டித்து தஞ்சை வடக்கு மாவட்டம் சார்பில் மாவட்டச் செயலாளா சு.கல்யாணசுந்தரம் எம்.பி, தலைமையில் முன்னாள் எம்.பி. இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழ கன் எம்.எல்.ஏ, கும்ப கோணம் மாநகரச் செயலாளர், துணை மேயர் சு.ப.தமிழழகன், ஒன்றியச் செயலாளர் உள்ளூர் டி.கணேசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி, மாநகர பொருளாளர் எஸ்.இரவிச்சந்திரன், மற்றும் சோடா கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட 21 பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடந்து வந்தது.

அதேபோல் கடந்த 2018 ஆம் ஆண்டு தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய அதிமுக அரசை கண்டித்து கும்பகோணம் மீன் மார்க்கெட் அருகே கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் தலைமையில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துணை மேயர் சு.ப.தமிழழகன் உட்பட 14 பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த வழக்கு நேற்று முன்தினம் தஞ்சை முதன்மை நீதிமன்ற நீதிபதி கனிமொழி தலைமையில் விசாரணை நடைபெற்றது. இந்த வழக்கை விசாரித்த தஞ்சை நீதிமன்ற நீதிபதி கனிமொழி மேற்படி வழக்கிலிருந்து அனைவரையும் விடுவித்து உத்தரவிட்டார். எனவே இந்த வழக்கில் இருந்து அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கில் கழக நிர்வாகிகளுக்காக மூத்த வழக்கறிஞர் எஸ்.ஜெயசந்திரன், தஞ்சை மாநகர வழக்கறிஞர் அணி தலைவர் ராம.அன்பழகன், வழக்கறிஞர்கள் எஸ். கார்த்திக், ஜெ.ராஜ லெட்சுமி ஆகியோர் வாதாடினர்.

# மும்பையில் கலைஞர் பிறந்த நாள் விழா! உறுப்பினர் உரிமை அட்டைகள் - நல உதவிகள் வழங்கல்!

## கவிஞர் சல்மா எம்.பி. வழங்குகிறார்! அலிசேக் மீரான் தலைமையில்

மும்பை, ஜூன் 28 -

மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா உறுப்பினர் உரிமை அட்டைகள் வழங்குதல் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (28.06.2025 சனிக்கிழமை) மாலை 6 மணியளவில் ஆரே காலனி, ஆரே காலணி, யூனிட் எண்: 7 அலிசேக் மீரான் தலைமையில் நடைபெறுகிறது. நெல்லை விநாயகர் கோவில் திடலில் வைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் 102 ஆவது பிறந்தநாள் விழா வெகுச் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் நடைபெறவுள்ள முத்தமிழறி ஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மராத்திய மாநிலத் திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளர் அலிசேக் மீரான் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் கவிஞர்.சல்மா எம்.பி. சிறப்புரையாற்று கிறார். பொறுப்புக்குழு உறுப்பினர்கள் சிவக்குமார் சுந்தர்ராஜ் வரவேற்புரையும் முனைவர் வதிலை பிரதாபன் தொடக்கவுரையும் ஆற்றுகிறார்கள்.

தந்தை பெரியார் படத்தை பொறுப்புக் குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவதாசனும், பேரறிஞர் அண்ணா படத்தை ஆரே காலனிக் கிளைக் கழக முன்னோடி கு.தர்ம லிங்கமும், முத்தமிழறிஞர் கலைஞர் படத்தை மாநில இளைஞரணி அமைப்பாளர் ந. வசந்தகுமாரும் திறந்து வைக்கிறார்கள்.

விழாவில், கழக உறுப்பினர் உரிமை அட்டைகளை கழகத் தோழர்களுக்கு வழங்குவதுடன் அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட உள்ளது.

பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பி.கிருஷ்ணன், அ.இளங்கோ, வே. சதானந்தன், வெ.அ.ஜெய்னுலா புதீன், வீரை சோ.பாபு, மெஹபூப் பாஷா, சோ. பா.குமரேசன், சிலுவை தாசன், மற்றும் மும்பை திராவிடர் கழகத் தலைவர் பெ.கணேசன், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், பாவலர் நெல்லை பைந்தமிழ், முகமதலி ஜின்னா பாண்டு, (ஆரே காலனி கிளை)கவிஞர் வீரமணி, பொய்சர் மூர்த்தி, ஆரே காலனி காங்கிரஸ் செல்லக்கண்ணு ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

ஆரே காலனிக் கிளைக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் சேகர் சுப்பையா, கனகராஜ், தமிழ்ச் செல்வன், சுரேஷ் குமார், கட்டமுத்து, முனியன், கோவிந்தராஜ், கிருஷ்ண மூர்த்தி கணேசன், பொன்னுசாமி ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக் கிறார்கள்.

க.ஜீவானந்தம் , ஜோகேஸ்வரி தமிழினநேசன், தானா அ.பாலமுருகன், Mulund எஸ்.பெருமாள், வாஷிபழனி, முத்து, அ.பாலசுப்ரமணியம், முத்தமிழ் தண்டபாணி பிவண்டி முஸ்டாக் பாய் தானே அ.பாலமுருகன் வாஷி கிளைக் கழகத் தோழர்கள், தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, பசுபதிநாதன்,

சயான் சு.சுடலையாண்டி, பகத் சிங் நகர் ரவி, மொகிதீன், செம்பூர் நம்பி, சீதா கேம்ப் ராஜேந்திரன், ஆழ்வார், திவாவேல்முருகன், அந்தேரி எம்.பொன்மணி, பரமசிவம் (செம்பூர்) பாண்டுப் செல்லத்துரை, உதயசூரியன், ஆனந்தரமேஷ், க.சுந்தர், மாரி, (பாண்டுப் கிளை) செய்யதுபாய், ராமு, (அம்பர்நாத் கிளை) ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இறுதியில் ஆரே காலனிக் கிளைக் கழக முன்னோடி மா.துரைராஜ் நன்றியுரையுடன் விழா நிறைவுறுகிறது. மும்பையின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் கழக உணர்வாளர்கள் யாவரும் விழாவில் கலந்து மகிழும்படி அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

# கரூர் மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (28.06.2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ., அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.இளங்கோ எம்.எல்.ஏ., கிருஷ்ணராய புரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி எம்.எல்.ஏ., கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவிராஜா, கழக தொழிலாளர்அணி துணைசெயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

பொருள் :

1.கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி ஓரணியில் தமிழ்நாடு புதிய கழக உறுப்பினர் சேர்க்கை

2.கழக வளர்ச்சி பணிகள்

**வி.செந்தில்பாலாஜி எம்,எல்.ஏ.**
செயலாளர்
கரூர் மாவட்ட தி.மு.க.



ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை ஒன்றிய கழக அலுவலகத்தில் 10 ஊராட்சிகளுக்கு குப்பைகளை சேகரிக்க 93 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 36 புதிய பேட்டரி வாகனங்களை தூய்மை பணியாளர்களுக்கு அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாஜலம் வாகனங்கள் மற்றும் சாவியை வழங்கி கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வே.கதிரவன், மனோகரன், அம்மாபேட்டை ஒன்றிய கழக செயலாளர்கள் வடக்கு கே.எஸ்.சரவணன், மத்திய டி.அசோக்குமார், தெற்கு எம்.ஈஸ்வரன் சின்ராசு, சண்முகசுந்தரம், இம்ரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.